Nestlé Good food, Good life

# பத்திரிகை வெளியீடு

கொழும்பு 29, ஆகஸ்ட் 2022

## நெஸ்லே நிறுவனத்தின் *நெஸ்டமோல்ற்று* இலங்கையில் முறைசார் சைக்கிளோட்டத்தின் வளர்ச்சிக்கு வலுவூட்டுகிறது

நெஸ்டமோல்ற்று சைக்கிளோட்டப் போட்டி 2022 நிகழ்வானது கடந்த ஞாயிற்றுக்கிழமை (28) வெற்றிகரமாக முடிவடைந்தது. இது நாடு முழுவதும் உள்ள 400 க்கும் மேற்பட்ட சைக்கிளோட்ட ஆர்வலர்களின் இலட்சியங்களை மேம்படுத்த அவர்களுக்கு வலுவூட்டியுள்ளது. இலங்கை சைக்கிளோட்ட சம்மேளனத்தினால் இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சின் வழிகாட்டுதலின் கீழ் தொடர்ச்சியாக இரண்டாவது வருடமாக ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வுக்கு, 'நல்லுணவு, நல்வாழ்வு' நிறுவனமான நெஸ்லேயின் பிரதான வர்த்தகநாமமான *நெஸ்டமோற்று* அனுசரணை வழங்கியது.

''பல தசாப்தங்களாக, நெஸ்லே நிறுவனத்தின் நெஸ்டமோல்ற்று இலங்கையில் விளையாட்டு வீரர்களை உடலாலும், மனதாலும் 100% தயாராக இருக்க அவர்களுக்கு சக்தியூட்டியுள்ளது. எமது வர்த்தகநாமத்தின் நோக்கமாகவுள்ள வளர்ச்சிக்கு வலுவூட்டும் வகையில், இலங்கை சைக்கிளோட்ட சம்மேளனத்துடன் மீண்டும் ஒத்துழைத்துச் செயற்படுவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். எங்களது திறமையான சைக்கிளோட்ட வீரர்கள் தமது திறமைகளை வெளிக்கொணர ஒரு தளத்தை வழங்கி, அவர்கள் முறைசார் சைக்கிளோட்டத்தை தமது வாழ்வில் முன்னெடுப்பதை விரைவுபடுத்துவதற்கு இது வழிவகுக்கும்,'' என்று நெஸ்லேயின் பாலை மூலமாகக் கொண்ட தயாரிப்புக்களுக்கான துணைத் தலைமை அதிகாரியான ருவான் வெலிகல அவர்கள் கருத்துத் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு முதன்முறையாக நடத்தப்பட்ட நெஸ்டமோல்ற்று சைக்கிளோட்டப் போட்டி, தொற்றுநோய் காரணமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த விளையாட்டு நிகழ்வுகளை நாட்டில் மீளவும் ஆரம்பிக்க உதவியது. அதன் மாபெரும் வெற்றியைத் தொடர்ந்து, இலங்கையில் முறைசார் சைக்கிளோட்டத்தை மேலும் வலுப்படுத்துவதற்காக வருடாந்தம் இந்நிகழ்வை நடத்துவதற்கு ஏற்பாட்டாளர்கள் தீர்மானித்துள்ளனர்.

ஏழு பிரிவுகளாக கொழும்பு விகாரமஹாதேவி பூங்காவில் உற்சாகம்மிக்க பார்வையாளர்களின் ஆரவாரத்திற்கு மத்தியில் போட்டிகள் இடம்பெற்றன.

போட்டி முடிவுகள்:

சாதாரண பகிரங்க பிரிவு - (1) எச். கே. என். எல். வன்ஷபிரிய, 58:45, இலங்கை இராணுவம்
(2) டில்ஷான் விஜித குமார, 58:45, இலங்கை இராணுவம்
(3) சாமர மதுஷான், 58:45, இலங்கை இராணுவம்

ஆண்கள் கனிஷ்ட பிரிவு - (1) எல். தெஷான் காவிந்த, 44:11, Fun Bee
(2) டபிள்யூ. எச். ஏ. சச்சின் உமேஷ், 44:11, கதிரான Speed
(3) ஜாவிந்த டில்ஷான், 44:11, பொரலஸ்கமுவ

பெண்கள் பிரத்தியேக பிரிவு - (1) மதுமாலி பெர்னாண்டோ, 51:29, இலங்கை இராணுவம்
(2) ஆன் ஷெனாலி, 51:29, இலங்கை கடற்படை
(3) சுலோச்சனா பாஞ்சாலி, 51:30, இலங்கை விமானப்படை

23 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவு - (1) ஷெஹால் சமத் டி சில்வா, 56:12, இலங்கை துறைமுக அதிகாரசபை
(2) ஏ. பீ. டீ. சாரங்க பெரேரா, 56:12, இலங்கை இராணுவம்
(3) கே. ரீ. கொஸ்கொடகே, 56:27, இலங்கை இராணுவம்

ஆண்கள் பிரத்தியேக பிரிவு - (1) அவிஷ்க மடோன்ஸா, 1:06:03, இலங்கை இராணுவம்
(2) எச். டபிள்யூ. எம். சந்தருவான் பிந்து, 1:06:03, இலங்கை இராணுவம்
(3) பிரபாஷ் மதுசங்க, 1:06:03, இலங்கை இராணுவம்

40 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் பிரிவு - 1) எல். சுசாந்த் சில்வா, 47:28 Super Sprint
(2) ஏ. கீதகாந்த டி சில்வா, 47:28 Super Sprint
(3) சுபாஷ் மஞ்சுள, 47:28, களனி CC

50 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் பிரிவு - 1) பிரசன்ன மடோன்ஸா, 45:12
(2) டபிள்யூ. ரோகித, 45:12
(3) எச். எரிக் இரான், 45:22, களனி CC

நெஸ்லே நிறுவனம் 115 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கை மக்களின் வாழ்வில் ஒரு அங்கமாகத் திகழ்ந்து வருகிறது. நாட்டில் விற்பனை செய்யப்படுகின்ற அதன் தயாரிப்புக்களில் 90% இற்கும் மேற்பட்டவை குருணாகலிலுள்ள அதிநவீன தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படுவதால், நிறுவனம் நாட்டின் சமூக-பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்பாற்றி வருகின்றது. நிறுவனத்தின் முதன்மையான வர்த்தகநாமமான, நெஸ்டமோல்ற்று 60 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கையில் குடும்பங்களின் நம்பிக்கையை வென்று, அவர்களால் சுவைத்து மகிழப்பட்டு வருகின்றது. பிரத்தியேகமாக இலங்கையிலேயே உற்பத்தி செய்யப்பட்டு, நாட்டின் மிகவும் அபிமானம் பெற்ற மோல்ற்று அடங்கிய பானம் என்ற தனித்துவமான நாமத்துடன், மோல்ற்று அடங்கிய பார்லி மற்றும் பாலின் நலச்செழுமைகளை வழங்கி வருகிறது, உடலையும் மனதையும் உற்சாகப்படுத்த தேவையான ஊட்டச்சத்துக்களால் இது செறிவூட்டப்பட்டுள்ளது.

---

**தொடர்பகளுக்கு:**

| | | | |
|---|---|---|---|
| நிறுவன பொது விவகாரங்கள் | தமித குலதுங்க | +94777915949 | Damitha.Kulatunga@lk.nestle.com |
| நிறுவன தொடர்பாடல்கள் | இசுறி அழககோன் | +94760395781 | Isuri.Alahakoon@lk.nestle.com |